# பாஸ்கா 2ஆம் வாரம் - ஞாயிறு

## மூன்றாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

இறைவனின் இரக்கத்தினை உணர்ந்து அனுபவித்து மகிழ இன்றைய பாஸ்கா காலம் இரண்டாம் ஞாயிறு திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் இறைவனின் பாடுகளையும் அதன் பின் உயிருடன் எழுப்பப்பட்ட இயேசு கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்ட மக்களிடையே அருஞ்செயல்கள் திருத்தூதர்கள் வழியாக செய்யப்படுவதை காண்கின்றோம். பேதுருவின் நிழல் பட்டவர்கள்கூட நலம் அடைகிறார்கள். நலம் அடைந்தவர்கள் நிழலினால் அன்றி அதன் பின் இருந்த நம்பிக்கையால் தான். எனவே இறைவன் முன் வரும்போது கிடைக்குமா என்ற ஐயத்திற்கு இடம் கொடாமல் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் உறுதிப்பட்டவர்களாய் வாழ அழைக்கப்பட்டுள்ளோம்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில், "தோமா! நீ என்னைக் கண்டதால் நம்பினாய்; காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர்" என்று இறை விசுவாசத்தை உறுதிப்படுத்த அழைக்கின்றார். ஆலயத்திற்குள் இருக்கும்போது நம்முள் காணப்படும் மனநிலை ஆலயத்திற்கு வெளியே சென்ற பின் மாறிவிடுகின்றது. அன்பும் பொறுமையும் குறைந்துவிடுகின்றது. இதைத்தான் தோமாவிடம், "ஐயம் தவிர்த்து நம்பிக்கை கொள்" என்றார் இயேசு. நமக்கும் தான் இதே சொற்கள் கூறப்படுகின்றது. துன்பவேளைகளிலும் சோதனை காலங்களிலும் நம்பிக்கை தேய்ந்து போக இறைவனை வசை பாடுகின்றோம். அப்போதெல்லாம் தோமாவிற்கு இறைவன் கூறிய வார்த்தைகளை மனதில் கொள்வோம். விசுவாசத்தில் நிலைபெற்றவர்களாய் இப்பலியில் பங்கேற்போம்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. மரித்தும் உயிரோடு எழுப்பப்பட்டவரே எம் இறைவா!

எம் திருச்சபையை வழிநடத்தும் திருச்சபை தலைவர்கள், பணியாளர்கள் உயிர்ப்பின் நற்செய்தியை மக்களிடையே வாழ்வாக்கவும், உம்மைப்போல் அன்பு , எளிமைப் பாதையில் நடந்து மக்களை இறைப்பாதையில் நடப்பிக்கும் வரம் வேண்டும் என ஆண்டவரைக் கெஞ்சி மன்றாடுவோம்.

2. உங்களுக்கு அமைதி உரித்தாகுக என்றவரே எம் இறைவா!

உம் உயிர்ப்பின் விழாவை மகிழ்வோடு கொண்டாடிய வேளையில் துஷ்டர்களால் தங்கள் இன்னுயிரை இழந்த இலங்கை மக்களுக்காகவும் ஆறுதல் இன்றி தவிக்கும் உறவுகளுக்காகவும் மன்றாடுகின்றோம். உமது இரத்தத்தால் மக்களை மீட்டது போல இவர்களின் இரத்தம் இலங்கையிலும் ஆட்சியாளர்களிடமும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என ஆண்டவரைக் கெஞ்சி மன்றாடுவோம்.

3. காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர் என்றவரே!

எம் நாட்டிலே பாராளுமன்றத் தேர்தல் பல்வேறு மாநிலங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இவ்வேளையில், உம் அருள் பெற்றவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்கவும் நாட்டை பிளவுபடுத்தாமல் வளர்ச்சிப் பாதையில் வழிநடத்துவோர் பொறுப்பேற்கவும் வரம் அருள வேண்டும் என ஆண்டவரைக் கெஞ்சி மன்றாடுவோம்.

4. நலன்களின் நாயகனே எம் இறைவா!

எம் பகுதி வாழ் மக்களை ஆசீர்வதிக்கவும், தகுந்த இயற்கைச் சூழல் அமைந்து வேளாண்மை சிறக்கவும், குடும்பங்களில் அமைதி சந்தோஷம் பெருகவும், உள்ளத்தின் தேவைகள் உம் அருளால் சந்திக்கப்படவும் வேண்டும் என ஆண்டவரைக் கெஞ்சி மன்றாடுவோம்.

**நன்றி: ஆசிரியை. திருமதி. ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

**"கடவுள் அன்பாய் இருக்கிறார்!" 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com